**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 102/2018**
**வழக்கு சாட்சி PW– 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.மீனாட்சி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுடலைமுத்து | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | இடைகால் | வயது | : | 59 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Friday of 03.07.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது இடைகால் ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதல்நிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.01.2017 அன்று இரவு 10.00 மணிக்கு கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் நான் பணியில் இருக்கும் போது, ஜெயலட்சுமி என்ற 30 வயதுடைய பெண் நபரை அவருடைய தாய் ஞானமணி என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் தன்னை தனது கணவர் கல்லால் அதே தினம் மாலை 04.00 மணிக்கு அடித்ததினால் தலையில் அடிப்பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்தபோது, அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(1). அவருக்கு தலையில் 4 x 1 x 1 cm அளவில் காயம் காணப்பட்டது. அதற்காக தையல் போடப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கினேன் அவர் 17.01.2017 அன்று மருத்துவ ஆலோசனையின்றி வெளியேறினார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் எனச் சான்று வழங்கினேன். விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.2 ஆகும். காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயங்கள் அவர் சொன்ன நேரத்தில் அவர் சொன்ன மாதிரி தாக்கப்படும் போது ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

காயம்பட்டவர் 108 வாகனத்தில் வந்ததாக நான் குறிப்பிடவில்லை. காயம்பட்டவர் வேறு எங்காவது முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டாரா? என்றால் அதனை பற்றி நான் குறிப்பிடவில்லை. ஆய்வாளர் ஆயுதத்தை காண்பித்து என்னிடம் கருத்துரு பெறவில்லை. ஒரு நபர் வாகனத்தில் செல்லும்போது, விபத்து ஏற்பட்டு கீழே விழுந்து நான் பார்த்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.04 11:32:52 +0530